# தொல்லியல் திணைக்களம்
## புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

# பதவி வெற்றிடங்கள்

தொல்லியல் திணைக்களத்தின் நாடு முழுவதிலுமுள்ள தொல்லியல் இடங்களில் தற்போது வெற்றிடமாகவுள்ள ஆரம்ப நிலையின் (தேர்ச்சியற்ற) தொல்லியல் உதவியாளர் III / காவற்காரர் III பதவிகளுக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | திறந்த அடிப்படையில் நிலவும் வெற்றிடங்கள் |
|---|---|
| (i) தொல்லியல் உதவியாளர் III | 191 |
| (ii) காவற்காரர் III | 324 |

02. **சம்பள அளவு:**
2026.03.25ஆம் திகதி முதல் அனுமதிக்கப்பட்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 பிரகாரம் PL-01-2025 இற்கு அமைவாக ரூபா 40,000 - 10x450 - 10x490 - 10x540 - 12x590 - 61,880.00 சம்பள அளவாகும்.

03. **கல்வித் தகைமைகள்:**
கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**தொழில்சார் தகைமைகள்:**
தொடர்புடைய துறையில் தொழில்சார் தகைமையைப் பெற்றிருத்தல் விசேடத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**அனுபவம்:**
தொடர்புடைய துறையில் பெற்றுள்ள அனுபவம் விசேடத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**உடற் தகுதிகள்:**
சகல அபேட்சகர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**வயது:** குறைந்தபட்ச எல்லை : 18 வயதிற்குக் குறையாமல்
அதிகபட்ச எல்லை : 45 வயதிற்கு மேற்படாமல்

- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் மேற்கூறிய அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**ஏனையவை**
i. கடந்த 05 வருடங்களினுள் மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராகவிருக்க வேண்டும். (கிராம சேவையாளரின் சான்றிதழ் மூலம் உறுதி செய்ய வேண்டும்)
ii. விண்ணப்பதாரர் நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும்.
iii. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான மேற்கூறிய தகைமைகளை விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

04. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் தொல்லியல் திணைக்களத்தின் www.archaeology.gov.lk எனும் இணையதளத்திற்கு 2026-06-05ஆம் திகதிக்குப் பின் பிரவேசித்து மேலதிக தகவல்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2026-07-06ஆம் திகதி வரை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

05. மேற்கூறிய தேவைப்பாடுகளுக்கு அமைவாகவல்லாத விண்ணப்பப் படிவங்கள், முழுமையற்ற விண்ணப்பப் படிவங்கள் மற்றும் முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். எந்தவொரு விதத்திலும் அழுத்தத்தைப் பிரயோகித்தல் தகுதியீனமாகக் கவனத்திற் கொள்ளப்படும் என்பதுடன் நேர்முகத் தேர்வுக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தொல்லியல் திணைக்களத்தின் ஆரம்ப நிலையின் (தேர்ச்சியற்ற) தொல்லியல் உதவியாளர் III / காவற்காரர் III பதவிகளுக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்'' எனக் குறிப்பிட வேண்டும்.

**தொல்லியல் பணிப்பாளர் நாயகம்,**
**தொல்லியல் திணைக்களம்,**
**த.பெ. இல. 532, சேர் மார்கஸ் பர்னாந்து மாவத்தை,**
**கொழும்பு 07.**

**செயலாளர்,**
**புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,**
**இல. 135, அனகாரிக தர்மபால மாவத்தை, கொழும்பு-07**

tamilguru.lk